ओं

சந்தியா மந்திரார்த்த போதினி.

இஃது

பரமஹம்ஸ

பாலசுப்பிரமணிய பிரம்ம...

ஸ்வாமிகளால்

இயற்றப்பட்டு...

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

 1910. [4 Annas.

உ

நம்பர் 955 சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
திருவள்ளுவர் நூல் நிலையம்,
பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் வெ. பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களால் இனமளிக்கப்பெற்றது.

__________ ஆண்டு __________ திங்கள் ______ நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

ओं

சந்தியா மந்திரார்த்த போதினி.

இஃது

பரமஹம்ஸ

பாலசுப்பிரமணிய பிரம்ம சுவாமிகளால்

இயற்றப்பட்டு,

சென்னை

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

 1910 [4 Annas.

ஸந்தியா மந்திரார்த்த போதினி.

பீடிகை.

ஸந்தியாவந்தனமெனில், மனது கடவுளுடன் சந்தித்தல். சந்தி அல்லது சேர்க்கையென்றும், அக்காலத்தில் செய்யும் - நமஸ்காரம் வந்தன மென்றும் சொல்லப்படும். அதாவது ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் பிரதிதினமும் கடவுளைப் பற்றி நினைத்து நமஸ்கரித்து மனதை நன்றாய் கடவுளுடன் சேர்க்கிறதே சந்தியாவந்தன மென ப்படும். கடவுளுடைய நினைப்பு அல்லது தியா னம் மனதை உலக விஷயங்களில் போகவிடா மல் நிறுத்தலுக்குச் சாதனம். மனதை ரஜோ குண தமோகுண வழிகளில் செல்லவொட்டா மல் சத்துவகுண வழியிலேயே செல்லும்படி வழக்கப் படுத்தி அந்த சத்துவகுணத்தையும் விட்டு கடவுளிடத்தில் ஒன்று சேரும்படி செய்வ தற்காயுள்ள சாதனம். மனதானது சத்துவரஜஸ் தமோ குணங்களில் பிரவேசிக்காம லிருக்கும் படி செய்யவேண்டு மெனில், அந்தந்தக் காலங்

களைத் தெரிந்துகொண்டு, மனே சம்பந்த மற்றிருக்கிறது சாமானிய மனிதர்களால் முடியாதாகையால், அந்தந்தக் காலங்களில் கடவுளுடைய ஒத்தாசையைக் கோரி அவருடைய கிருபையால் மனே நிவர்த்தி செய்துகொள்ளுகிறதற்குச் சாதனமாயுள்ளதே சந்தியா வந்தனமெனப்படும். நாளொன்றுக்கு மூன்றுவித காலங்களிருக்கின்றன. அஃதாவது:—உதயம், மத்தியானம், சாயந்திரம். உதயகாலம் சத்துவகாலமென்றும், மத்தியானம் ரஜோ காலமென்றும், சாயங்காலம் தமோ காலமென்றும் சொல்லப்படும் - எப்படியெனில், மனதானது எல்லாவிசனங்களினின்றும் விடுபட்டு சுழுப்தி ஆனந்தத்தை யடைந்து விழிப்புண்டாகிற முதற் சமயம் உதயகால மாகையால் அப்பொழுது மனது பரிசுத்தமாயிருக்கும். அதுவே சத்துவ காலமெனப்படும். அப்படிப்பட்ட உதய காலத்தில் பகவத்தியானம் செய்யவேண்டு மென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. ஆகையாற்றான் அப்படிப்பட்ட தியானத்திற்குச் சாதனமாயுள்ள கிரியைக்கு, பிராதக்கால சந்தியா

வந்தனமென்று பெயர். பிற்பாடு மனதானது ரஜோ குணத்தையடைந்து விவகாரங்களிற் பிரவேசித்துக் களைத்து பசி தாக முண்டாகி போஜனப் பிரயத்தனம் செய்யும்போது - கடவுளே! ரஜோகுண காலமாகிய விவகார சமயத்தில் தெரிந்துந் தெரியாமலும் செய்த குற்றங்களை மன்னித்து என்மனதை நல்வழியிலேயே செல்லும்படி கிருபையருள வேண்டுமென்றும், விவகாரத்தினால் களைத்திருக்கிற சரீரத்திற்கு பலமுண்டாகச் சாதனமாயுள்ள ஆகாராதிகளை தயார்செய்யப் பட்டிருக்கிற படியாலும், அவைகள் உம்முடைய கிருபையாலெனக் குண்டாயிருக்கிற படியாலும் அவைகளை உமக்கு நிவேதனம் செய்து உம்முடைய அனுமதியின் பேரில் அந்த பகவந் நிவேதன பதார்த்தங்களை புஜிக்கிறேனென்று அநுஷ்டிக்க வேண்டிய அநுஷ்டானத்திற்கு, மத்தியான சந்தியா வந்தனமென்று சொல்லப் படும். இப்படிச் செய்யாமல் எந்த ஸ்திரீ புருஷர்களாவது சாப்பிடுவார்களேயானால், "தேத்வகம் புஞ்சதே பாபா யே பசன்த்யாத்ம காரணாத்," (கீதை - அத் - 3, சுலோ - 13 - ல் இந்த

கிரந்த கர்த்தாவினுல் செய்யப் பட்டிருக்கிற பகவத்கீதை வியாகியானத்தைப் பார்க்கவும்.) "யார் நான் சம்பாதிக்கிறேன் சுகமாகச் சாப்பிடு கிறேன் என்று கடவுளை நினையாமல் கடவுளு க்கு நிவேதனஞ் செய்யாமல் சாப்பிடுவானே அவன் பாபத்தைச் சாப்பிடுகிருன்" என்று பகவத் வசன மிருக்கிற படியால், இந்த மத்தியான சந்தியா வந்தனமும் அவசியந்தான் - பிறகு சாயங்காலம் சமீபிக்கையில் எல்லோரும் வீடு சேர்ந்து சாப்பிட்டு நித்திரை போக பிரயத்த னப் படுவார்கள். "நித்ருலஸ்ய ப்ரமாதோத்தம் தத்தாமஸ முதாஹ்ருதம்," (கீதை அத் - 18, சுலோ-39.) இதுவே தமோகுண காலமெனப் படும். சத்துவ ரஜஸ் தமோகுணங்களில் மிக வும் இழிவானதாயுள்ள தமோகுணத்தில் மனது பிரவேசிக்கையில், மனதானது கெடாமலிருக் கும் படிக்கும், மத்தியான முதல் சாயங்காலம் வரைக்கும் விவகாரத்தில் தெரிந்துந் தெரி யாததாயு முள்ள கிரியைகளினு லுண்டாகும் பாபங்களை மன்னித்து இராத்திரி தன்னைக் காப் பாற்றி மறுபடியும் காலமே க்ஷேமமாய் எழுந்

திருக்கும்படி செய்யக் கடவுளை பிரார்த்தனை செய்யவேண்டு மென்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயமே - இதுவே சாயங்கால சந்தியா வந்தன மெனப்படும்.

நித்திரையி லிருந்து முதல் விழிப்பு வரும் போதுள்ள மனதைப் பார்த்து ஓ மனமே! அவிவேகத்தில் மூழ்கி ஒன்றுந் தெரியாமலிருந்த நித்திரைக்கே இவ்வளவு மன வுச்சாஹமும் துக்க நிவர்த்தியும் தின அநுபவ சுகமுமுண்டாகுமானால், பகவத்தியானத்தில் மூழ்கி யிருகிற நனவிற் சுழுப்திக்கு எவ்வளவு நிஜவானந்த முண்டாகலா மென்பதை நன்றாயாலோசித்து, இந்த சத்துவகுண காலமாகிய உதய காலத்திலேயே பகவத்தியான மாகிற பிராதக் கால சந்தியா வந்தனத்தைச் செய்யென்று புத்திசொல்லி, ஆரம்பிக்க வேண்டும். இந்த உதயகால சந்தியா வந்தனத்தை முடித்துக் கொண்ட பின் நீ சம்சாரத்திலிருக்கிற படியால் அதற்குவேண்டிய விவகாரங்களைச் செய்து சாப்பிடப் போகிறதற்கு முன்பாக ஓ கடவுளே! என்னை இந்த ரஜோகுண விவகாரத்திலேயே வைத்து விட

வேண்டாம், எனக்கு சுத்த மனதைக் கொடுத் திரக்ஷிக்கவேண்டு மென்கிறதைத் தெரிவிக்கிற மத்தியான சந்தியா வந்தனத்தைச் செய்து, பகவந்நிவேதனம் செய்த சாப்பாட்டை புஜித்து மறுபடியும் விவகாரஞ் செய்து முடித்து முன்சொன்னபடி சாயங்கால சந்தியா வந்தனத்தையும் தவறுமல் செய்து கொண்டு வருகிறவர்களுக்கு,

யாவஜ்ஜீவன பர்யந்தம்
யஸ்த்ரு ஸந்த்யம் கரோதிச।
ஸச ஸூர்யஸமோ விப்ரஹ
தேஜஸா தபஸா ஸதா॥
தத்பாத பத்ம ரஜஸா
ஸத்யஃ பூதாவஸுந்தரா।
ஜீவன்முக்த ஸ்ஸதேஜஸ்வீ
ஸந்த்யாபூதோஹி யோத்விஜஃ॥

யார், மேற் சொன்ன விதமாய் முக்காலங்களிலும் விடாமலும் தவறுமலும் சந்தியா வந்தனமென்கிற பகவத்தியானத்தை தான் பிழைத்திருக்கிற வரையில் செய்து வருவார்களோ, அவர்கள் நல்ல தேஜோமய முடையவர்களாகி, சகலாபீஷ்டங்களையு மடைந்து, ஜீவன்முக்தர்க

ளாவர்களென்று சாஸ்திரங்களும் பெரியோர்களும் பூர்வீகர்களும் முறையிட்டிருக்கிறபடியால், வாலிபர்கள் முதலாயுள்ள எல்லோரும் சந்தியாவந்தனத்தினுடைய நிஜார்த்தத்தைத் தெரிந்துகொண்டு கிருதார்த்தர்களாகவேண்டி இந்த வியாக்கியானத்தைச் செய்து இதற்குச் "சந்தியா மந்திரார்த்தபோதினி," என்று பேரிட்டு பிரசுரஞ் செய்கின்றனன்.

இது வரைக்கும் சந்தியாவந்தனத்திற்கு இத்தகைய வியாக்கியானமில்லையென்பது இதைப் படிகிறவர்களுடைய மனதிற்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். ஏனெனில், இதுகாறும் வெளிவந்த வியாக்கியானங்கள் பாஹ்யார்த்தத்தை வெளியிட்டு அதிருப்தியையுண்டு பண்ணிற்றே ஒழிய இந்த வியாக்கியானத்தைப்போல ரஹஸ்யார்த்தத்தை (Esoteric meaning) வெளியிட்டு எல்லோருக்கும் துக்க நிவிர்த்தியையும் பரமானந்தப் பிராப்தியையும் உண்டாக்கமாட்டாவென்பது திண்ணம்.

இப்படிக்கு,
பரமஹம்ஸ
பாலசுப்பிரமணிய பிர்ம்ம சுவாமி.

ओं

ஸந்தியா மந்திரார்த்த போதிநி.

க.

அபவித்ர: பவித்ரோவா
ஸர்வாவஸ்தாங்கதோபிவா ।
யஸ்மரேத் புண்டரீகாக்ஷம்
ஸபாஹ்யா ப்யன்தர சுசி: ||

தாத்பரியம். காமக்குரோதி துர்க்குணங்களினுல்செய்யப்பட்ட பாபங்களினுடைய அனுபவமாகிய பசுபக்ஷியாதி ஜன்மங்களிலுழன்று அந்தவாஸனைகளுடன் மானிடஜன்மத்தை யடைந்திருக்கிறவனும், சிரத்தை பக்தி முதலான சத்துவகுணங்களினுல் பலனை விரும்பிச்செய்த நற்செய்கைகளின் பேற்றுல் தேவதா ஜன்மத்தையடைந்து அந்த வாஸனைகளுடன் மானிடஜன்மத்தை யடைந்திருக்கிறவனும், பாபபுண்ணியங்களைச் சமமா

கச்செய்து அவைகளின் பலனாக இந்தமானிட ஜன்மத்தை யடைந்திருக்கிறவனுமான மனிதர்கள், ஹிருதயகமலத்தில் வியாபித்து நித்தியமாயும், நாசரகிதமாயு மிருக்கிற கடவுளை அடியிற்கண்ட விதமாய் ஸ்மரிப்பவர்க ளெவர்களோ, அவர்கள் உள்ளும் புறம்பும் பரிசுத்தமான மனதையுடையவர்க ளாகிறார்கள்.

உ.

ஓம் கேசவா யஸ்வாஹா
ஓம் நாராயணா யஸ்வாஹா
ஓம் மாதவா யஸ்வஹா ||

தா.—விவகார காலங்களில் ப்ரஹ்ம விஷ்ணு உருத்திர சொரூபங்களாயும், லயகாலத்தில் ஒரேபரமாத்மாவாக (ஒருகடவுளாக) இருக்கிறதே சுபாவமாயுள்ள வஸ்துவே கேசவனெனப்படும். அப்படிப்பட்ட ஒரே கடவுள் என்னுடைய பாபங்களை நன்றாய் எரித்து விடுவாராக. பிறப்பிறப்பறச் செய்கிற முக்திஸ்தானமானதும், சுத்தசைதன்னிய சொரூபமாயு மிருக்கிற வஸ்துவே நாராயண னெனப்படும். அப்பேர்ப்பட்ட ஒரே கடவுள் என்னுடைய பாபங்களை நன்றாய் எரித்து விடக்கடவாராக.

மாயை அவித்தை முதலானவைகளை நடுங்கச்செய்கிறவரும், மௌனம் - தியானம் - யோகம் முதலியவைகளாலடையக்கூடிய வஸ்துவே மாதவனெனப்படும். அப்

படிப்பட்ட ஒரேகடவுள் என்னுடைய பாபங்களை நன்ருய் எரித்துவிடுவாராக; என்று உள்ளங்கையில் தண்ணீரைவைத்துக்கொண்டு ஓம் கேசவாய ஸ்வாஹாவென்றுமுதலிலும், ஓம் நாராயணுய ஸ்வாஹா வென்று இரண்டாந்தடவையிலும், ஓம் மாதவாய ஸ்வாஹாவென்று ஸ்மரித்து மூன்ரும்முறையிலும், இந்த மூன்றுதரமும் அந்த ஒரே கடவுளை ஸ்மரணைசெய்துகொண்டு தண்ணீரைக் குடித்துவிடுகிறதே ஆசமன மெனப்படும். பின்னர்.

ஓம் கோவிந்தாய நமஹ
ஓம் விஷ்ணவே நமஹ ||

மனமுதலான எல்லா இந்திரியங்களையும் நடத்துகிற அந்தரியாமி சொரூபமான ஆத்மாவாகிய ஒரேகடவுளுக்குநமஸ்காரம்;

சற்றும் வித்தியாசமில்லாமல் எல்லாவற்றிலும் பிரவேசித்து வியாபித்திருக்கிற ஒரேகடவுளுக்கு நமஸ்காரம், என்று ஸ்மரித்துக்கொண்டு வலது உள்ளங்கையால் இடது உள்ளங்கையையும், இடது உள்ளங்கையால் வலது உள்ளங்கையையும் துடைக்கவேண்டும்; பிறகு.

ஓம் மதுஸூதனுய நமஹ
ஓம் த்ருவிக்ரமாய நமஹ ||

அசுர சுபாவத்தைப் போக்கடிக்கிற வஸ்துவாகிய ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; எல்லா உலகங்களையும் வியாபித்திருக்கிற ஒரேகடவுளுக்கு நமஸ்காரம், என்று ஸ்மரித்து உதடுகள் இரண்டையும் துடைத்துக்கொள்ள வேண்டும்; பிறகு.

ஓம் வாமனாய நமஹ-ஓம் ஸ்ரீதராயநமஹ ||

மங்களகரமான வேதங்களினால் புகழப்படுகிற ஒரே கடவுளுக்கு நமஸ்காரம்; உயர்ந்த கீர்த்தியடைந்திருக்கிற ஒரேகடவுளுக்கு நமஸ்காரம், என்று ஸ்மரித்து தலையைத்தொடவேண்டும்.

ஓம் ஹ்ருஷீகேசாய நமஹ ||

இந்திரியங்களை தங்கள் தங்களுடைய வேலைகளில் நியமிக்கிற ஒரேகடவுளுக்கு நமஸ்காரம், என்று வலது புஜத்தின்பேரில் தண்ணீரைத் தெளித்துக்கொள்ளவும்;

ஓம் பத்மநாபாய நமஹ ||

இருதய கமலத்தில் பிரகாசிக்கும் ஒரேகடவுளுக்கு நமஸ்கார மென்று கால்களில் தண்ணீர் தெளித்துக் கொள்ளவும்;

ஓம் தாமோதராய நமஹ ||

சமம், தமம், உபரதி, திதீக்ஷை, சமாதானம், சிரத்தைகளென்கிற அறுவித நடக்கைகளினால் சுத்தமனதை யடைந்திருக்கிற சுத்தமனதினால் அடையக்கூடிய வஸ்து

வாகிய ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; என்று சிரசில் தண்ணீரைத்தெளித்துக்கொள்ளவும். (மேற்சொல்லப் பட்ட ஆறுவிதங்களினுடைய விவரம் இந்தகிரந்தகர்த்தாவினுல் செய்யப்பட்டிருக்கிற ஈசாவாஸ்யோபநிஷத் டீகாவில் 6 - வது பக்கத்தைப்பார்க்கவும்.) அதன் பின்னர்.

ஓம் ஸங்கர்ஷணாய நமஹ ||

நன்றாய் பாபநிர்மூலஞ்செய்கிற வஸ்துவாகிய ஒரே கடவுளுக்கு நமஸ்காரம்; என்று ஸ்மரித்து எல்லாவிரல்களின் ஒருங்குசேர்த்த நுனியால் மொவ்வயைத் தொடவேண்டும்; பிறகு.

ஓம் வாஸுதேவாய நமஹ
ஓம் ப்ரத்யும்நாய நமஹ ||

எங்கும் ஆத்மசொரூபமாய் வசிக்கிற வஸ்துவாகிய ஒரே கடவுளுக்கு நமஸ்காரம்; சுயஞ்சோதி சொரூப்மான ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; என்று ஸ்மரித்து ஆள்காட்டிவிரல் கட்டைவிரல் இவ்விரண்டினுல் மூக்கின் இருபக்கங்களையும் தொடவேண்டும்; பிறகு

ஓம் அநிருத்தாய நமஹ
ஓம் புருஷோத்தமாய நமஹ
ஓம் அதோக்ஷஜாய நமஹ
ஓம் நாரஸிம்ஹாய நமஹ ||

ஒன்றிலும் கட்டுபடாத வஸ்துவாகிய ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; எல்லா ஜீவர்களிடத்தும் வியாபித்திருக்கிற சிரேஷ்டமான வஸ்துவாகிய ஒரேகடவுளுக்குநமஸ்காரம்; சகல இந்திரியங்களாலும் தெரிந்துகொள்ள முடியாத ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; எவ்விதமான நாசமுமற்ற ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; என்று ஸ்மரித்துக் கட்டைவிரல் பவித்திரவிரல் இவ்விரண்டினுல் கண்களையும் காதுகளையும் தொடவேண்டும்; பிறகு.

ஓம் அச்சுதாய நமஹா||

எல்லாம் நசித்தபோதிலும் தான் நசியாத ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; என்று ஸ்மரித்து கட்டைவிரல் சுண்டுவிரல் இவ்விரண்டினுல் நாபியைத்தொடவேண்டும்; பிறகு.

ஓம் ஜநார்தனுய நமஹா ||

பிறப்பு இறப்புகளைப் போக்கடிக்கும் ஒரே கடவுளுக்கு நமஸ்காரம்; என்று உள்ளங்கையை இருதயமத்தியில்வைத்து ஸ்மரிக்கவேண்டும்; பிறகு.

ஓம் உபேந்த்ராய நமஹா||

பரம ஐஸ்வரியவஸ்துவாகிய ஒரேகடவுளுக்கு நமஸ்காரம்; என்று கைந்நுனியை சிரசில் வைக்கவேண்டும். பிறகு.

ஓம் ஹரயே நமஹா
ஓம் ஸ்ரீக்ருஷ்ணுய நமஹா ||

நிஜபக்தர்களுடைய பாபங்களை நசிக்கச்செய்கிற ஒரே கடவுளுக்கு நமஸ்காரம்; பக்தர்களுடைய மனதை ஆனந்தமயமாய் செய்கிற ஒரேகடவுளுக்கு நமஸ்கா காரம்; ஒன்று மூடப்பட்ட கையினுல் புஜத்தினுடைய அடியைத்தொடவேண்டும்.

அவ்விதமாக ஸ்மரித்துச்செய்கிற கிரியைகளெல்லாம் சேர்ந்து ஆசமன மெனப்படும். இதற்குத்தான் சுயவசியம் (Self Mesmerism) என்று சொல்லப்படும்; இது செய்தாலொழிய சந்தியாவந்தனத்திற்கல்லது எந்தக்கர்மத்திற்கும் அருகனுகமாட்டான். கடவுளினுடைய இவ்வித ஸ்மரணக்கிரியைகளினுல் ஒருவன் பரிசுத்த மனதை உடைத்தாயிருக்கையில் அவனுடைய கைகளினுடைய நுனியிலிருந்தும் கால்களினுடைய நுனியிலிருந்தும் ஒருவிதமான (Aura வென்கிற) சக்தி பிரதிபிராணிகளுக்கும் வெளிவருகிறது. அதை வீணுகப்போகவிடாமல் கடவுளுடைய ஸ்மரணைகாலத்தில் உண்டாகிற ஆராஜவ அல்லது சக்தியை மறுபடியும் தன்னிலேயே இந்திரியங்களின் மூலமாய் தன்சரீரத்திலேயே பிரவேசிக்கும்படி செய்தால் அப்படிப்பட்ட பிராணிகளுக்கு நாளாவட்டத்தில் இந்திரிய நிக்கிரகமுண்டாகி, அதனுல் மனோநிக்கிரகமுண்டாகி கிருதார்த்தத்தையடையச்செய்யும். இதை அவசியம் செய்யவேண்டும். இப்படிப்பட்ட அநுஷ்டானத்தை யுடைவர்களுடைய கைபட்டாலும் பாதம்வைத்தாலும் க்ஷேமமும் அபி

விருத்தியும் மேன்மேலு முண்டாகும். அப்படியல்லா தவர்களுடைய கை கால் ஸ்பர்சத்தினுல் கெடுதலுண் டாகிறதென்பது எல்லோருக்கும் அநுபவஸித்தமே. அத னுற்ருன் உலகில் ஆடவர் பெண்டிருள் ஒருவர் அடிவை த்தார்கள், க்ஷேமம் அல்லது நாசமென்றும், அவர்கள் தொட்டார்கள் நாசம் அல்லது அபிவிருத்தி என்றும் வழங்குங்காரணம்.

௫.

உத்திஷ்டந்து பூத பிசாசா꞉
ஏதே பூமி பாரகா꞉
ஏதேஷா மவிரோதேந
ப்ரும்ம கர்ம ஸமாரபே ||

தா-ம்.—சரீரத்திற்கு அபகீர்த்தியை யுண்டாக்குகிற அல்லது சத்கர்மங்களுக்கு இடையூறு யுண்டுபண்ணு கிற பூதபைசாசங்களுக்கொப்பான இந்தக்காமக்குரோ தாதி துர்க்குணங்கள், என்னிடத்திலிருந்து விலகிப் போகக்கடவன. ஏனெனில், இந்த துர்க்குணங்கள் தங் களுடைய கெடுதலாயுள்ள குணங்களைவிட்டு நன்மையை யடையவேண்டி பரப்ரஹ்ம விஷயமாயுள்ள சந்தியா வந்தன கர்ம்மத்தை நான் ஆரம்பிக்கப் போகிறேன். ஏனெனில், இந்தச்சந்தியாவந்தனம் முதலான நல்லகர் ம்மங்களினுல் துர்க்குணங்கள் விஷயப்பிரவர்த்தனையை விட்டு கடவுள் முகமாகத்திரும்பி நன்மையை யடையு

மென்று ஸ்ரீபகவத்கீதை அத் - 2, சுலோ. 70 - ல் சொல்லப்பட்டிருப்பதாலும், கீதை - அத் - 6, சுலோ-40 - ல் நல்லகர்ம்மங்களைச் செய்தவன் ஒருக்காலும் கேடடையானென்றும், ஆனால் யார்கேட்டையடைவார்களெனில், கீதை - அத் - 16, சுலோகம் 17-முதல் 22, வரைக்கும் லிஸ்டுகொடுக்கப்பட்டிருக்கிற படியாலும், எல்லோரும் சந்தியாவந்தனம் முதலான சத்கருமங்களை தப்பாமற்செய்ய வேண்டுமென்பது அத்யாவசியம் - (இந்தக்கிரந்த கர்த்தாவினால் இயற்றப்பட்டிருக்கிற கீதாதாத்பர்ய தீபிகையைப்பார்க்கவும்.)

௯.

ப்ராணாயாமம்.

ஓம்பூ꞉ ஓம்புவ꞉ ஓம்ஸுவ꞉ ஓம்மஹ꞉
ஓம்ஜந꞉ ஓம்தப꞉ ஓம்ஸத்யம்
ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோந ப்ரசோதயாத்
ஓமாபோ ஜ்யோதீரஸோ அம்ருதம்
ப்ரும்ம பூர் புவஸ்வரோம் ||

தா-ம்.—சர்வபரிபூர்ணமான பரமாத்மாவே ஓங்காரமெனப்படும். அப்படிப்பட்ட ஆத்மாவை (கடவுளை) சகல ஐஸ்வரிய சம்பன்னராகவும், எல்லாவற்றிற்கும் பரம சிரேஷ்டமானவராகவும், சகல சுகச்சொருபராகவும், எல்லாவற்றைப்பார்க்கிலும் அதிகமாய் பூஜிக்கத்தகுந்த

வராகவும், சமஸ்த ஜகத்சிருஷ்டிகர்த்தராகவும், ஞான சொரூபராகவும், சிரேஷ்டமான ஞானானந்தச் சொரூபராகவுஞ்சொல்லப்பட்டவர். அப்படிப்பட்ட சர்வபரிபூர்ணராயும் சுயஞ்சோதி சொரூபராயும் சிருஷ்டி ஸ்திதி லய காரணராயும் சிரேஷ்டமான அஞ்ஞான இருளைப் போக்கடிக்கிறவ ராயுமுள்ள எந்தபரமாத்மாவாகிய கடவுளுடைய தேஜஸ்ஸு எங்களுடைய புத்திகளை ஏவுகிறதோ, அப்படிப்பட்ட ப்ரஹ்ம தேஜஸை தியானம் செய்வோமாக. அந்ததேஜஸ் சகலத்தையும் நன்றாய் பரிபாலிக்கிறதாகவும், சுயம்பிரகாச சொரூபமாயும், சுகச்சொரூபமாயும், நித்திய முக்த சொரூபமாயும், சர்வ பரிபூரணமாயும், சமஸ்த பூதோற்பத்திக்குக் காரணமாயும் சமஸ்த ஜகத்தாதாரமாயும், ஜீவன் முக்தர்களடையக்கூடிய ஸ்தானமாயு மிருக்கிறது.

கடவுளுடைய ஸ்மரணையைத்தவிர மற்றெல்லாவெண்ணங்களையும் நீக்குகிறதே பிராணாயாம மெனப்படும். (இதன் விவரம் இந்தக்கிரந்த கர்த்தாவால் செய்யப்பட்டிருக்கிற கேனோபநிஷத் தீபிகையின் 187 - வது பக்கத்தின் பிராணாயாம விவரத்தைப்பார்க்க.)

ரு.

ஸங்கற்பம்.

ஸ்ரீபரமேச்வரமுத்திஸ்ய
மமோபாத்த துரிதக்ஷயத்வாரா

ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம்
ப்ராதஸ்ஸந்தியா முபாஸிஷ்யே ॥

கடவுளை உத்தேசித்து அவருடைய ஸ்மரணையினல் நான்செய்த சகலபாபங்களையும் முன்சொன்னவிதமாய் போக்கடித்துக் கொண்டபடியால், கடவுளுக்குப் பிரீதியாக உதயகால சந்தியாவந்தனத்தைச் செய்கிறேன். என்று சங்கற்பம் செய்துகொள்ளவும். இப்படியே மத்தியானத்திலும் சாயங்காலத்திலும் சங்கற்பம் செய்துகொள்ளவேண்டியது. பிறகு:—

சூ.

மார்ஜனம்.

ஓம் ஆபோஹிஷ்டா மயோபுவஃ
தாந ஊர்ஜே ததாதந மஹேரணாய சக்ஷஸே
யோவச்சிவதமோரஸஃ தஸ்யபாஜயதேஹநஃ
உசதீரிவ மாதரஃ தஸ்மா அரங்கமாமவோ
யஸ்யக்ஷயாய ஜின்வத ஆபோஜநயதாசநஃ ॥

தா-ம்.—ஓ பரமாத்ம சொரூபங்களே ! எந்தச் சுபாவத்தினல் சுகசாதனங்களாகவிருக்கிறீர்களோ அந்தக்காரணத்தினல் நீங்கள் எங்களுடைய அந்தக்கரணத்தைப் பூஜிக்கத்தகுந்த சிரேஷ்டமான மனோஹரமாயுள்ள ப்ரஹ்ம சாக்ஷாத்காரத்திற்காக ப்ரஹ்மானந்தத்தையுண்டுபண்ணுகிற பரமாத்மாவில் (கடவுளின்பேரில்) நிற்

கும்படி செய்யுங்கள். ஓ கடவுளே! உம்முடைய எந்த ஆனந்த சொருபமானது மிகவும் மங்களகரமாயுளதோ அதை எப்படித்தாய்மார்கள் தங்களுடைய ஸ்தந்நிய பானத்தை குழந்தைகளுக்குக் கொடுத்து ஆனந்தத்தை யுண்டுபண்ணுவார்களோ, அப்படிப்பட்டதை எங்களுக்கு இந்தச் சன்மத்திலேயே யடையும்படி செய்வீராக. எந்த ஆனந்தச் சொருபத்தில் நிலைநிற்கக்கோரி பெரியோர்கள் சந்தோஷமாய் விரும்புகிறார்களோ அந்த ஆனந்தசொருபத்தைச் சீக்கிரமாய் நாங்களடையும்படி செய்யக்கோருகிறோம். ஓ கடவுளே! எங்களுடைய மனதை அந்த ஆனந்தச்சொருபத்தில் வசிக்கும்படிசெய்யப் பிரார்த்திக்கின்றோம். என்று பவித்திர விரலால் தண்ணீரைத் தொட்டுத்தொட்டு சரீரமெங்கும் தெளித்துக்கொள்ளவும். இதுதான் சுயசமஸ்காரம் (Self Baptism) எனப்படும். பிறகு,

எ.

உதயகால சந்தியாவந்தனத்தின் ஜல ப்ராசன மந்திரம்.

ஸூர்யஸ்ச மாமந்யுஸ்ச
மன்யுபதயஸ்ச மந்யு க்ருதேப்யஃ
பாபேப்யோ ரக்ஷந்தாம்
யத்ராத்ரியா பாபமகார்ஷம்

மநஸா வாசா ஹஸ்தாப்யாம்
பத்ப்யாமுதரேணசிச்நா
ருத்ரிஸ்த தவலம்பது
யத்கிஞ்ச துரிதம்மயி
இதமஹம் மாமம்ருதயோநௌ
ஸூர்யே ஜ்யோதிஷி ஜுஹோமிஸ்வாஹா||

தா-ம்.—ஞானிகளாலடையத்தகுந்த வஸ்துவாகியகடவுளும் ஞானியும், ஞானோபதேச குருவும், குரோதாதி துற்குணங்களினால் செய்யப்பட்ட பாபங்களிலிருந்து என்னைக்காப்பாற்றுவார்களாக. சென்ற இராத்திரியில் துர்ப்புத்திகளினாலும், பொய் முதலாயுள்ள துர்ப்பாஷணைகளினாலும், துர்தானம் சாதுக்களை ஹிம்சிக்கிற முதலான கைச்சேஷ்டைகளினாலும், பிராண ஹிம்சை செய்கிற பாதகக் கிரியைகளினாலும், சாப்பிடக்கூடாத கள்ளு சாராயம் மாமிசம் முதலானவைகளைச் சாப்பிட்டதினாலும், பரஸ்திரீ சம்பந்தம், அகாலங்களில் சுயஸ்திரீ சம்பந்தங்களினாலும், எந்தப் பாபங்களைச் செய்திருப்பேனோ, அவைகளை நித்தியானந்த சுகத்தைக்கொடுக்கும் கடவுள், நசிக்கச்செய்யப் பிரார்த்திக்கிறேன். இவைகளைத்தவிர நான் தெரிந்துந் தெரியாமலும்செய்த பாபங்களையும், எனதென்கிற மமகாரத்தையும், நானென்கிற அகங்காரத்தையும் முக்த ஸ்தானமானதும் நசிக்காத மோக்ஷகாரணமானதும் சுயம்பிரகாசமான கட

வுளினுடைய தியானமாகிற தேஜஸ்ஸில் இந்தச் சகல பாபங்களையும் போக்கடித்துக் கொள்ளும்படி கடவுள் கிருபைசெய்யப் பிரார்த்திக்கிறேன். என்று உள்ளங் கையில் ஜலத்தை வைத்துக்கொண்டு இந்தமந்திரத்தைச் சொல்லி உள்ளங்கை ஜலத்தை சாப்பிடவேண்டும். இதுவே சித்தசுத்தி. (Inner Purification.)

அ.

மத்தியான ஜலப்ராசனமந்திரம்.

ஆபஃபுனன்துப்ருதிவீம்ப்ருதிவீபூதாபுனாதுமாம் புனன்துப்ரும்மணஸ்பதிர்ப்ரும்மபூதாபுனாதுமா யதுச்சிஷ்டமபோஜ்யம் யத்வாதுஸ்சரிதம்மம[ம் ஸர்வம்புனன்துமாமாபோ அஸதான்ச ப்ரதிக்ரஹக்ஸ்வாஹா ||

தா-ம்.—கடவுள் சரீரத்தைப் பரிசுத்தமாகச் செய்தும் சகல இந்திரியங்களோடுங் கூடியிருக்கிற சரீரமானது கடவுளால் பரிசுத்தஞ்செய்யப்பட்டதாய் நற்காரியங்க ளில் பிரவேசித்து அநுஷ்டானஞ்செய்கிற என்னைப் பரிசுத்தனாகச்செய்யட்டும். கெட்ட வழியிலுள்ளவர்கள் சாப்பிட்டு மிகுந்த அன்னபானாதிகளை நான் சாப்பிட்டி ருந்தாலும், ராஜஸ தாமஸ குணங்களை அபிவிர்த்திசெய் யும் சாப்பிடக்கூடாத மது மாம்சாதிகளைச் சாப்பிட் டிருந்தபோதிலும், மற்ற அசாஸ்திரமான செய்கைகள் என்னால் செய்யப்பட்டிருந்தபோதிலும், மேற்சொன்ன

எல்லா பாபங்களிலுமிருந்து கடவுளென்னை விடுவித்து பரிசுத்தனுகச்செய்யப் பிரார்த்திக்கிறேன். என்று உள் ளங்கைத் தண்ணீரைச் சாப்பிடவேண்டும். இது மத் தியான சித்தசுத்தி (Inner Purification.) மந்திரம் எனப்படும்.

௬.

சாயங்கால ஜலப்ராசன மந்திரம்.

அக்நிஸ்ச மாமந்யுஸ்ச மன்யுபதயஸ்ச
மன்யுக்ருதேப்யஃ பாபேப்யோ ரக்ஷன்தாம்
யதஹ்நா பாபமகார்ஷம்
மநஸா வாசா ஹஸ்தாப்யாம்
பத்ப்யா முதரேண சிச்நா
அஹஸ்த தவலம்பது யத்கிஞ்ச துரிதம் மயி
இதமஹம் மாமம்ருதயோநௌ
ஸத்யே ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா ॥

தா-ம்.—சர்வசாக்ஷி சொரூபனுன கடவுளும், ஞானி யும்ஞாநோபதேசகுருவும், குரோதம் முதலான துற்கு ணங்களினுல்செய்யப்பட்ட பாபங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுவார்களாக. சென்ற பகலில் என்னுடைய கெட்ட புத்தியினுலும், கெட்ட சம்பாஷணையினுலும், துர்தானம் வாங்குவதினுலும், பிராண ஹிம்சை பொது மாதர்வீட்டுப்பிரவேசம் முதலான பாதக் கிரியைகளி னுலும், சாப்பிடக்கூடாத பதார்த்தங்களைச் சாப்பிட்ட

தினுலும், பரஸ்திரீ சம்பந்தமும் அகாலத்தில் சொந்த ஸ்திரீ சம்பந்தமுதலான துன்மார்க்கங்களினுலும், என்னென்ன பாபங்கள் செய்திருப்பேனே அவைகளெல்லா வற்றையும், சுயஞ்சோதி சொரூபரான கடவுள் நசிக்கச் செய்யவேண்டுமென்று பச்சாதாபத்துடன் பிரார்த்திக்கிறேன். இவைகளைத் தவிர நான் தெரிந்துந் தெரியாமற்செய்த பாபங்களென்னிடத்திலிருந்தாலும் அப்படிப்பட்ட சகல பாபங்களையும், எனதென்கிற மமகாரத்தையும், நானென்கிற அகங்காரத்தையும், காலத்ரயங்களிலும் நசியாத ஜகத்காரணமான கடவுளினுடைய ஸ்வயம்பிரகாச தேஜஸ்ஸில் பஸ்மீகரிக்கிறேன். நன்ருய் பஸ்மமாகும்படி கடவுள் கிருபைசெய்வாராக. இஃதே சாயங்கால ஆந்தரசுத்தி. (Inner Purification) என்னப்படும். மறுபடியும் முன்போல் ஆசமனஞ்செய்துகொண்டபிறகு :—

கс.

மறுபடியும் புநர்மார்ஜந (Self Baptism.) மந்திரம்.

தகிக்ருவ்ணோ அகாரிஷம்
ஜிஷ்ணோ ரச்வஸ்ய வாஜிநః
ஸுரபிநோ முகாகரது
ப்ரணஆயூம்ஷி தாரிஷது
ஆபோஹிஷ்டா மயோபுவః
தாந ஊர்ஜே ததாதந

மஹோராணாய சக்ஷஸே
யோவச்சிவ தமோரஸ:
தஸ்யபாஜயதேஹந:
உசதீரிவ மாதர:
தஸ்மா அரங்கமா:மவோ
யஸ்ய க்ஷயாய ஜின்வத
ஆபோ ஜநயதா சந: ||

தா-ம்.—ஜயசீலரும் சர்வவியாபியும் பக்தர்களை அதி சீக்கிரமாய் சம்ரக்ஷிக்கிறவரும் ஜகத்காரண வசீகரண சக்தி சம்பன்னருமான கடவுளை ஸ்தோத்திரஞ்செய்வோமாக. அக்கடவுள் எங்களுடைய மனோபுத்தியாதிகளை பரிசுத்தமுள்ளவைகளாகச் செய்யட்டும். எங்களாலே செய்யப்படுகிற சமஸ்தகர்மங்களையும் பகவத் பிரீதியாகும்படி அநுக்கிரகிப்பாராக. பிறகு வரக்கூடிய வார்த்தைகளுக்கு அர்த்தம் 6-வது மந்திரத்தில் பார்த்துக்கொள்ளவும், இந்த மந்திரத்தைச்சொல்லி ஜலத்தைச் சரீரத்திலும் சிரசிலும் தெளித்துக்கொள்ளவேண்டும்.

கக.

மறுபடியும் சுயசமஸ்காரம் (Self Beptism.)

ம ந் தி ர ம்.

ஹிரண்யவர்ணா சுசயப்பாவகா
யாஸு-ஜாத: கச்யபோ யாஸ்விந்த்ர:

அக்நிம் யாகர்பம் ததிரே
விரூபாஸ்தாநஆபஃ சக்ம்ஸ்யோநா பவந்து
யாஸாம் ருஜா வருணோ யாதி மத்யே
ஸத்யா ந்ருதே அவபச்யன் ஜநாநாம்
மதுஸ்ச்யுதஃ சுசயோ யாஃ பாவகா
ஸ்தாந ஆபஃ சக்ம் ஸ்யோநா பவந்து.
யாஸாம் தேவா திவிக்ருண்வந்தி
பக்ஷம், யாஅந்தரிக்ஷே பஹுதா பவந்தி
யா ப்ருதிவீம் பயஸோந்தந்தி
சுக்ரு, ஸ்தாந ஆபஃசக்ம் ஸ்யோநா பவந்து
சிவேநமா சக்ஷுஷா பச்யதா ஆபஃசிவயா
தநுவோ பஸ்ப்ருசத, த்வசம்மே ஸர்வாக்ம்
அக்நீக்ம் ரப்ஸுஷதோ ஹுவேவோ
மயி வர்சோ பலமோ ஜோநிதத்த
த்ருப தாதிவ முஞ்சது
த்ருபதாதிவேன் முமுசாநஃ
ஸ்விந்நஃ ஸ்நாத்வீ மலாதிவ
பூதம் பவித்ரேணேவாஜ்யம்
ஆபச்சுந்தந்து மைநஸஃ ||

தா-ம்.—சுயம்பிரகாசமானதும் பரிசுத்தமானதும் எல்லாவற்றையும் பாவனஞ்செய்கிறதும் எந்தவஸ்துவிலிருந்து ஸர்வசாக்ஷியான சூரியனுண்டானனோ, எந்தவஸ்

துவிலிருந்து பரமைசுவரியனுன இந்திரனுண்டானுனோ, எந்த வஸ்துவானது மஹத்தான வடவாமுகாக்கினியை சமுத்திரத்தின் வயிற்றில்வைத்திருக்கிறதோ, நாநாவி தபேர்களையும் ரூபங்களையுமுடைய விசுவரூபனுன பர மாத்மாவாகிய ஒரே கடவுள் எங்களுக்கு துக்க நிவிர்த் தியைக்கொடுத்து சுகப்பிராப்த்தியை உண்டாக்குவா ராக. எந்தப்பரிசுத்தமனதில் ப்ரகாசிக்கிற சாக்ஷி சைதன்ய சொரூபமானது பிராணிகளுடைய புண்ணிய பாபங்களை விசாரிக்கிறதோ, எந்த வஸ்து சுத்தமனதை யுடையபேர்களுக்கு அமிருதத்தை பொழியச்செய்கிற தோ, பரிசுத்தமானதோ, தன்னையடைந்த எல்லாவற் றையும் பாலனஞ்செய்கிறதோ, அப்படிப்பட்ட பரமாத் மாவாகிய ஒரே கடவுள் எங்களுக்குத் துக்க நிவர்த்தி யைக்கொடுத்து சுகப்பிராப்தியை யுண்டாக்குவாராக. எந்தவஸ்து இந்திரியங்கள் மூலமாய் கிரீடார்த்தமாக ஆகாராதிகளை கைக்கொள்ளுகிறதோ, எந்தவஸ்து இரு தயாகாசத்தில் அநேகவிதமாய் பிரகாசிக்கிறதோ, எந்த வஸ்து பக்தர்களுடைய சரீரத்தை அமிருத ரூபகுணங் களால் திருப்தியடைவிக்கச் செய்கிறதோ, சகல பரி சுத்தமான பரமாத்மாவாகிய அந்த ஒரே கடவுள் எங் களுக்கு துக்கநிவிர்த்தியைக் கொடுத்து சுகப்பிராப்தி யை யுண்டாக்குவாராக. ஓ கடவுளே! உம்முடைய மங் களகரமான கருணைகடாக்ஷத்தினுல் என்னைப் பாரும். ப்ரஹ்மானந்தமாயுள்ள உம்முடையச் சொரூபத்தினுல்

என்னுடைய சரீரத்தை வியாபித்து பவித்திரனாகச்செய்யும். எல்லாம் தானாக விருக்கிற ஓ கடவுளே! எல்லாவற்றையும் பரிபாலனஞ் செய்கிற உம்முடைய சொரூபத்திலுள்ள சகலமான தேஜஸ்ஸையும் ப்ரஹ்ம வர்சஸ்ஸையும் பலத்தையும் உத்சாஹத்தையும் என்னிடத்தில் நீக்கமறவிருக்கும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டியதாய் உம்மை பிரார்த்திக்கிறேன். கைதியிலிருந்து ஒருவனை விடுவிக்கிறாற் போல என்னை அநாதி பந்தத்திலிருந்து விடுவிக்க வேண்டும் - கைதியிலிருந்து விடுபட்டவனைப் போலவும், வேர்வையுள்ளவன் ஸ்நானஞ் செய்து அழுக்கு முதலானவைகளைப் போக்கடித்துக் கொள்ளுகிறாற் போலவும் உம்முடைய ஞான ஸ்நானத்தினால் என்னுடைய அவிவேக மலத்தைப் போக்கி சகல பாபங்களிலிருந்தும் விடுவிப்பீராக. என்று ஜலத்தைச் சரீரமெங்கும் தெளித்துக்கொள்ள வேண்டும் - பிறகு ஆசமனஞ் செய்து கொண்டு அர்க்கியப் பிரதானஞ் செய்யவேண்டும்.

கஉ.

அர்க்கியப் பிரதான சங்கற்பம்.

ஸ்ரீபரமேசுர ப்ரீத்யர்த்தம்
ப்ராயச்சித்த அர்க்ய
ப்ரதான பூர்வக ப்ருதரார்க்யப்ர
தாநம் கரிஷ்யே||

தா-ம்.—நானிது வரைக்கும் தெரிந்துந் தெரியாமற் செய்த பாபங்களிலிருந்து விடுவிக்கவேண்டி கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டும், நான் செய்த பிழைகளுக்கு எனக்கு நிஜமான பரிதாப முண்டாயிருக்கிறதென்றும், இனிமேல் புத்திபூர்வகமாய் பாபங்களைச் செய்யத்துணியேனென்றும் வாக்குதத்தஞ் செய்து இரண்டு கைகளில் நிரம்பத் தண்ணீரை வைத்துக்கொண்டு பின் வருமாறு மந்திரத்தைச் சொல்லவும்.

௧௩.

பிராதக்கால அர்க்யப்ரதான மந்திரம்.

ஓம் பூர் புவ ஸ்வஃ தத்ஸவி
துர்வரேண்யம் ப்ரகோ தேவஸ்ய
தீமஹி தியோ யோந
ப்ரசோத யாத்॥

தா-ம்.—சமஸ்த பூதோற்பத்திக்குக் காரணமாயும், சமஸ்த ஜகத்தாதாரமாயும், ஜீவன் முக்தர்களுடைய ஸ்தான மாயும், சுயஞ்சோதி சொரூபமாயும், சிருஷ்டி ஸ்திதி லய காரணமாயும், அஜ்ஞான இருளைப் போக்கடிக்கக் கூடியதாயுமுள்ள எந்த தேஜஸ்ஸானது எங்களுடைய புத்திகளை ஏவுகிறதோ அந்த ப்ரஹ்மதேஜஸாகிய கடவுளைத் தியானிப்போமாக வென்றும்,

௧௪.

உத்யன்த மஸ்தம்யன்த
மாதித்ய மபித்யாயன் குர்வன்

ப்ராம்மணோ வித்வான்
ஸகலம் பத்ரமச்நுதே।
அஸௌ வாதித்யோ ப்ரும்பேதி [வேத॥
ப்ரும்மைவஸன் ப்ரும்மாப்யேதி ய ஏவம்

தா-ம்.—சங்கற்ப விகற்ப ரூபமாய் உதித்து ஒடுங்குகிற மனதிற்கு மனதாயும், சாக்ஷி மாத்திரமாயுமுள்ள பிரக்ஞானமே ப்ரஹ்மமென்று தியானித்தும், இந்தச் சுயம் பிரகாசமான பிரக்ஞானமே கடவுளென்றும் சுவாநுபவத்தால் தெரிந்துகொண்ட ப்ரஹ்ம வேத்தனான ஞானி எல்லாவிதமான சிரேயஸ்ஸையு மடைகிறான். எவன் அவ்விதச் சுவாநுபவத்தினால் தெரிந்துகொள்வானோ அவன் பரப்ரஹ்ம சொரூபனாகி ப்ரஹ்மமேயாய் விடுகிறான். தன்னிலிருக்கிற பிரக்ஞானமென்கிற சுயம் பிரகாஸவஸ்துவே ப்ரஹ்மமென்றும் தெரிந்துகொள்வதெவ்விதமெனில், இரண்டு கைகளில் நிரம்பத் தண்ணீரெடுத்துக்கொண்டு அதில் பார்த்தால் சூரியனுடைய பிரதிபிம்பம் காணப்படும். அந்தப்பிரதிபிம்பம் சூரியனைக்காட்டிலும் வேறில்லையல்லவா? அப்படியே சுத்தாந்தக்கரணமென்கிற தண்ணீரில் பிரதிபலிக்கிற ஆத்மசைதன்னியமாகிற பிரக்ஞானமே ப்ரஹ்மமெனப்படும். அது எத்திசைகளிலும் வியாபித்துத் தன்னுடைய இருதயத்திலு மிருக்கிறதென்றும் தெரியச் செய்யவேண்டி தண்ணீர் நிறைந்த கையுடன் மூன்றுதடவை பிரதக்ஷிணஞ்செய்து தண்ணீரைக் கீழேவிட்டுவிட்டு தன்னு

டைய இருதயத்தைத்தொடவேண்டும். இதனால் தானுட்படக்காணப்படுகிற எல்லாம் ஆத்ம சொரூபமாகத் தெரிந்துகொண்டவனுக்கு சோகமோகங்கள் கிடையா. சோகமோகங்கள் அவிவேகத்தினாலும், அபிமானத்தினாலும், பயத்தினாலுமுண்டாகின்றன. பயமே பாபம் பயமே மரணம். (Fear is sin and fear is death) என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடியால் நிர்ப்பயனாய் சுதந்தரனாய் ஜீவன்முக்தனாகச்செய்கிறதே இந்தச்சந்தியாவந்தனமென்று தெரிந்துகொள்ளவும்.

கரு.

மத்தியான அர்க்யப்ரதானமந்திரம்.

ஹம்ஸ் ஸ்சுசிஷத் வஸுரந்தரிக்ஷஸத்
ஹோதா வேதிஷத் அதிதிர் துரோணஸத்
ந்ருஷத் வரஸத்ருதஸத் வ்யோமஸத்
அப்ஜா கோஜா ருதஜா அத்ரிஜா ருதம் ப்ரஹத்

தா-ம்.—பரிசுத்தமான அந்தக் கரணத்திலிருக்கிறவரும், எல்லா ஜெகத்தையும் தன்னிலுடையவரும், சூரிய சந்திர நக்ஷத்திரங்களில் வியாபித்திருக்கிற வரும், அக்கினியின் தேஜோரூபரும், எல்லா உலகங்களிலும் வியாபித்திருக்கிறவரும், சகலதர்ம்ம ரூபராய் ப்ரஹ்மாண்டமென்கிற வீட்டிலிருப்பவரும், வைசுவா நரரூபராய் மனிதர்களி லிருப்பவரும், ஞான சொரூபராய் சிரேஷ்

டமான ப்ரஹ்ம வேத்தாக்களி லிருப்பவரும், அந்தரி யாமியாய் சகலப் பிராணிகளினுடைய இருதயத்திலி ருப்பவரும், தண்ணீரிலிருக்கிற சங்கு மகரமீன் முத லான சொரூபரும், பசு பக்ஷியாதிகளில் அந்தரியாமி யாயிருப்பவரும், வேதத்தினால் வெளியிடப் படுகிறவ ரும், சகல பூதங்களிலு மிருக்கிறவரும், ஸர்வ வியாபியு மான பரமாத்மாவாகிய கடவுள்,எல்லாவற்றிற்கும் சிரே ஷ்டமானவர் ஸத்தியசொரூபர். அப்படிப்பட்ட கடவு ளுக்கு அர்க்கியப் பிரதானஞ்செய்கிறேன். எனில் அவ ருடைய சந்நிதியில் இனிமேல் அபமார்க்கங்களுக்குட் படேனென்று பிரதிக்ஞை செய்யவேண்டும்.

பிறகு ஆசமனஞ்செய்துகொண்டு பிராதச் சந்தியா தர்ப்பணஞ் செய்யவேண்டும். திருப்தியையுண்டுபண் ணும் கிரியைக்குத் தர்ப்பணமெனப்பெயர். கடவுளு டைய சக்திகளில் முக்கியமானவைகள் இங்கே சொல் லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குத் திருப்தியாக தர்ப் பணஞ்செய்தால் அவைகளிவனுக்கு எல்லாச்சிரேயஸை யுமுண்டுபண்ணும் என்று தெரிந்துகொண்டு செய்யக் கடவதாகவும்.

கசு.

பிராதச்சந்தியா தர்ப்பணம்.

ஸந்த்யாம் தர்பயாமி, காயத்ரீம் தர்பயாமி
ப்ராம்ஹீம் தர்பயாமி, நிம்ருஜீம் தர்பயாமி.

தா-ம்.—ஓ ப்ரஹ்ம ஜ்ஞாநசொரூபினீ! பரிசுத்தமனதுடன் ஸ்மரிக்கிறவர்களை யிரக்ஷிக்கும் சொரூபினீ! ப்ரஹ்ம தேஜஸ்ஸொரூபினீ! சர்வசக்திச்சொரூபினீ! கடவுளைத் தியானித்து நான்விடும் ஜலமானது உங்களுக்குத் திருப்தியை யுண்டுபண்ணி-நீங்களெனக்கு எல்லாச்சிரேயஸ்ஸுகளு முண்டவதாகவென்று ஆசீர்வதியுங்கள்.

கஎ.

மத்தியான தர்ப்பணம்.

ஸந்த்யாம் தர்பயாமி
ஸாவித்ரீம் தர்பயாமி
ரௌத்ரீம் தர்பயாமி
நிம்ருஜீம் தர்பயாமி॥

தா-ம்.—ஓ ப்ரஹ்ம ஜ்ஞாநச்சொரூபினீ! வேதசாஸ்திரயோக மாதாச் சொரூபினீ! காமக்குரோதாதி துற்குணங்களைப் போக்கடிக்கும் சொரூபினீ! ஸர்வசக்திச் சொரூபினீ! மேற்சொன்னவிதமாய் ஆசீர்வதியுங்கள்.

கஅ.

சாயங்காலத் தர்ப்பணம்.

ஸந்த்யாம் தர்பயாமி
ஸரஸ்வதீம் தர்பயாமி
வைஷ்ணவீம் தர்பயாமி
நிம்ருஜீம் தர்பயாமி॥

தா - ம்.—ஓ ப்ரஹ்மஜ்ஞானச் சொருபினி! சுத்தசத்துவச்சொருபமான ஓசாந்தருபினி! ஸர்வவியாபக சக்திச்சொருபினி! ஸர்வசக்திச்சொருபினி! மேற்சொன்னவிதமாய் ஆசீர்வதியுங்கள்.

களங்கமற்று உருக்கிவிட்ட நீரைப்போலொத்தது ஆத்மசக்தி - அந்நீரில் ருபமும் பேருங்கிடையாது. ஆனாலதை யோரச்சில் வார்த்தால் அந்தருபத்தையும் பேரையுமடைந்து விடுகிறுப்போல, நம்முடையமனதே அச்சு, அந்தமன தானது கடவுளுடையத்தியானத்திலிருந்தால் அந்த அச்சில் வார்க்கப்பட்ட உருக்கினநீர் கடவுளுடைய ருபத்தையும் பெயரையுமே அடையும். ஆகையால் அதற்குச்சாதனமானது இந்தச்சந்தியாவந்தன மென்று தெரிந்து செய்யவேண்டிய தவசியம். பிற்பாடு ஆசமனஞ் செய்துகொண்டு,

கக.

ப்ரஹ்மசக்திப் பிரார்த்தனை மந்திரம்.

ஆயாது வரதாதேவி
அக்ஷாம் ப்ரும்மஸம்ஹிதம்।
காயத்ரீம் ச்சந்தாஸாம் மாதா
இதம் ப்ரும்ம ஜுஷஸ்வமே।
யதந்ஹாத் குருதே பாபம்
ததந்ஹாத் ப்ரதி முச்யதே।
யத்ராத்ரியாத் குருதே பாபம்

தத்ராத்ரியாத் ப்ரதிமுச்யதே।
ஸர்வவர்ணே மஹாதேவீ
ஸந்த்யாவித்யே ஸரஸ்வதீ।
ஓஜோஸி ஸஹோஸி
பலமஸி ப்ராஜோஸி தேவாநாம்
தாம நாமாஸி விச்வமஸி
விச்வாயுஃ ஸர்வமஸி ஸர்வாயுஃ
அபிபூரோம் காயத்ரீ மாவாஹயாமி
ஸாவித்ரீ மாவாஹயாமி
ஸரஸ்வதீ மாவாஹயாமி
ச்சந்தருஷீ நாவாஹயாமி
ஸ்ரிபமாவாஹயாமி
காயத்ரியா காயத்ரீச்சந்தோ
விச்வாமித்ரருஷிஃ
ஸவிதாதேவதா அக்நிர்முகம்
ப்ரம்மாசிரோ விஷ்ணுர் ஹ்ருதயம்
ருத்ரசிகா ப்ருதிவீ யோநிஃ
ப்ராணாபான வ்யானோதான
ஸமாநா ஸப்ராணா
ச்வேதவர்ணா ஸாம்க்யாய
நஸகோத்ரா, காயத்ரீ

சதுர்விக்ம் சத்யசக்ஷு
த்ரிபதா ஷட்குக்ஷிঃ
பன்சசிர்ஷோப நயனே விநியோகঃ||

தா - ம்.—சகலாபீஷ்டங்களை நிறைவேற்றுகிற சக்திச்சொரூபமாயுள்ள ப்ரஹ்ம தேஜஸ்ஸானது நாசமற்றதாயும் வேதாந்தப்பிரமாண நிச்சயமுடையதாயு மிருக்கிற பரமாத்மதத்துவத்தைப் போதிப்பதற்காக வருக. எல்லா வேதங்களுக்குத்தாயான (சுத்தமனதால் தியானிக்கிறவர்களை ரக்ஷிக்கிற) காயத்திரி எனக்கு இந்தப் பரதத்துவத்தை யுபதேசிக்கட்டும். அந்த உபதேசத்தினால் பகலில் மனினால் தெரிந்துந் தெரியாமற் செய்யப்படும் பாபம் விலகிப்போகும். இராத்திரியில் செய்யப்படும் பாபங்களு மப்படியே விலகிப்போகும், எல்லாவற்றினாலும் பூஜிக்கப்படுகிற சமஸ்த லயகாரணமான ஓ ப்ரஹ்ம சக்திச்சொருபமா! நன்ருய் தியானிக்கிறதினாலுண்டாகும் பரமோத்தம புருஷார்த்த சாதனமான ஓப்ரஹ்ம ஜ்ஞான சொருபிநீ! சுத்தசத்துவச் சொருபமான ஓசாந்தருபிநீ! நீயே என்னுடைய ஜ்ஞானசக்தியாயிருக்கிருய். என்னுடைய துர்க்குண சத்துருவைப் போக்கடிக்கிற சக்தி. சரீரபலருபசக்தி. ஜ்ஞானப்பிரகாச சக்தியாயு மிருக்கிருய். சமஸ்த தேவதா சொருபங்களும் நீயேயல்லவா. சகலப்பிரபஞ்ச சொருபமும் நீயே. சகலப்பிரபஞ்ச ஆயுளும் நீயே. சகல ஆயுளும் நீயே.சகலபாபக்ஷயங்களைச்செய்யும்சக்தியும்நீயே.நீயே

பிரணவாத்மிகை. பரிசுத்தமனதுடன் தியானிப்போர்களை யிரக்ஷிக்கிற காயத்திரி சொரூபத்தை உதயகால ஜபத்தில் கூப்பிடுகிறேன். வேதசாஸ்திர யோகமாதா சொரூபத்தை மத்தியான ஜபகாலத்தில் கூப்பிடுகிறேன். சுத்த சத்துவ சொரூபத்தை சாயங்கால ஜபத்தில் கூப்பிடுகிறேன். வேதங்களைப் பிரபஞ்சத்திற்கு வெளியிட்ட ருஷிகளை ஜபகாலத்தில் கூப்பிடுகிறேன். இந்தச் சந்தியாவந்தனம் முதலான தத்துவோபதேசங்களைச்செய்து மேன்மைக்குக் கொண்டுவந்த குரு முதலானவர்களைக் கூப்பிடுகிறேன். என்றால், இவர்களெல்லோரையும் ஜபகாலத்தில் ஸ்மரிக்கிறேனென்பதாம். காயத்திரிசொரூபத்தினுடைய ஆனந்தாமிருத ஸ்வரமானது, பரிசுத்தமனதுடன் தியானிக்கிறவர்களை யிரக்ஷிக்கும் பரமாத்ம சொரூபமே சுவரம் அல்லது சந்தஸ்ஸு. அப்படிப்பட்ட சந்தஸ்ஸுக்கு ருஷி (சகல மந்திரங்களையும் ஞ்ஞானபரமாகப் பார்க்கும்மஹான்) விசுவாமித்திரர். இதற்குத்தேவதை சமஸ்த ஜெகதோத்பத்திக் காரணமான பரமாத்மா. அப்படிப்பட்ட பரமாத்மாவுக்கு முகம் தேஜஸ்ஸு, எனில், சுவயஞ்சோதி, சிரசு சமஸ்த சொரூபமானவிராட். இருதயம் சர்வபரிபூர்ண சொரூபம், சிகை சமஸ்த லயசொரூபம். சமஸ்தோத்பத்திஸ்தானம் விசுவரூபம். அப்படிப்பட்ட விசுவரூபமானது வாக்திசெய்தல், கண்ணிரட்பைகளைமூடுதல்-திறத்தல் தும்முதல். பிராணனிருக்கையிலும் பிராணன்போனபிற்பாடும்

சரீரத்திலிருக்குதல் என்கிற நாகன்–கூர்மன் – கிருகரன்–தேவதத்தன் – தனஞ்சயன் என்று சொல்லப்படுகிற ஐந்துபப்பிராணங்களுடன் கூடினதும், பிராணன்–அபானன் – வியானன் – உதானன் – சமானனென்று சொல்லப்படுகிற ஐந்து பிராணங்களுடன் கூடினதும், ஞ்ஞானப்பிரகாச சொரூபமான ஆத்மதத்துவ சொரூபத்தை ஆதிபுருஷனை வுடையதும், (கர்மேந்திரியங்கள் – 5, ஞானேந்திரியங்கள்–5, பிராணங்கள் – 5, உபப்பிராணங்கள் – 5. அந்தக்கரணம் – 4, ஆக இருபத்துநான் கிந்திரியங்களினுலும் தெரிந்து கொள்ளமுடியாததும், அழிவற்றதும், ருக்குவேதம் – யஜுர்வேதம் – சாமவேத சொரூபமானதும், நான்குதிசைகள் மேல் கீழ், என்கிற ஆறுவயிறுகளை யுடையதும், மனம் – புத்தி – சித்தம் – அகங்காரம், பிரக்ஞை யெனப்படும் ஐந்து தலைகளையுடையதுமான காயத்திரி சொரூபத்தைத் தெரியச்செய்கிற இந்தச்சந்தியாவந்தனத்திற்கு ஜனன மரணங்களற்ற ப்ரஹ்ம சாயுஜ்யமே பலம். இங்கே ருஷிபேரைச்சொல்லுகையில் கையால் தன்சிரசைத் தொடவேண்டும். அது பிரபஞ்சத்திற்கு இந்த காயத்திரி ருக்கை வெளியிட்ட ருஷிக்கு கைகட்டி சிரசாநமஸ்கரிக்கிறே னென்கிறதைத் தெரிவிக்கிறது. அதினுடைய சந்தஸ்ஸை சொல்லும்பொழுது தன்னுடைய வாயைத்தொடவேண்டும். அதனுல் அந்த ருக்கானது எந்த ஸ்வரத்துடன் ருஷிமுகமாய் வந்ததோ அந்தச்சுவரூபம் தன்வாக்கினில் தெளிவாய் உச்சரிக்கும்படி அந்தருஷி யாசீர்வசனம் செய்வா

ருக வென்பதைக்குறிக்கிறது. ருக் தேவதையைச்சொல்லும்போது தன்னுடைய இருதயத்தைத் தொடவேண்டும். அதனுல் அந்த ருக் தேவதை தன்னுடைய இருதயத்தில் பிரவேசித்து தான்செய்கிற ஜபத்தை நன்ருய் அங்கீகரித்து ஜபத்தின் பலனுன ஸாயுஜ்ய விநியோகமானது தன்னுடைய மனதிலிருந்து விலகாமலிருக்கும்படி யாசீர்வதிக்க வேண்டுமென்பதைத் தெரிவிக்கிறது, என்று தெரிந்துகொள்ளவும். பிறகு ஆசமனம் செய்துகொண்டு, காயத்திரி ஜபம் செய்யவும்.

உ௦.

காயத்திரி ஜப மந்திரம்.

ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோந ப்ரசோதயாத்||

தா - ம்.—சர்வபரிபூர்ண மானதும், சுவயஞ்சோதி சொருபமானதும், சிருஷ்டி ஸ்திதி லயகாரணமானதும், சிரேஷ்டமான அக்ஞான இருளைப் போக்கடிக்கக்கூடியதுமான எந்ததேஜஸ்ஸு (கடவுள்) எங்களுடைய புத்திகளை ஏவுகிறதோ அந்த ப்ரஹ்ம தேஜஸ்ஸை தியானஞ்செய்வோமாக. என்று அவரவர்களுடைய சக்திக்குத்தகுந்தபடி செய்யவும். 108 - தடவை செய்கிறது நலம் - பிற்பாடு ஆசமனஞ்செய்து.

உக.

ப்ராதஃ ஸூர்யோபஸ்தான மந்திரம்.

மித்ரஸ்ய சர்ஷணீத்ருதஃ
ச்ரவோதேவஸ்ய ஸாநஸிம்
ஸத்யம் சித்ர ச்ரவர்தமம்
மித்ரோ ஜநாந்யாதயதி
ப்ராஜாநன் । மித்ரோ
தாதார ப்ருதிவீமுதத்யாம்। மித்ரஃ
க்ருஷ்டீ ரநிமிஷாபி சஷ்டே।
ஸத்யாயஹவ்யம்
க்ருத்வத் விதேம।
ப்ரஸமித்ர மர்தோ
அஸ்து ப்ரயஸ்வான்।
யஸ்த ஆதித்ய ஶிக்ஷதி
வ்ரதேந। நஹந்யதே
நஜீயதே த்வோதோ
நைநக்ம் மஹோ அச்நோ
த்யன்திதோ நதூரத்।

தா - ம்.—பிராணிகளை அந்தந்த ஜீவர்களுடைய தர்ம் மாதர்ம்ம சொரூபங்களினல் தரிக்கிறவரும், முக்காலங் களிலும் நசியாதவரும், ஆச்சரியமாகக்கேட்டு அநுஷ் டிக்கிறவர்களுக்குச் சுகத்தை யுண்டுபண்ணுகிறவரும் சக

லரக்ஷகருமான கடவுளினுடைய கீர்த்தியை நன்றாய் பஜிப்போமாக. சர்வரக்ஷகனான கடவுள் அந்தந்த ஜீவர்களுடைய தர்ம்மா தர்ம்மங்களைத் தெரிந்துகொண்டு ஜீவர்களை பிரேரேபிக்கிறார். சர்வரக்ஷகனான கடவுள் பூமி ஆகாசம்முதலான சமஸ்தத்திற்கு ஆதாரபூதராயிருக்கிறார். கடவுள் ஜீவர்களுடைய பாபபுண்ணிய ரூபமாயுள்ள காயக வாசிக மானஸிகங்களான சகலவிவகாரங்களையும் சர்வகாலத்திலும் சாக்ஷிபூதனாயிருந்து கண்டுகொள்ளுகிறார். அப்படிப்பட்ட கடவுளுக்கு ஞானப்பிரகாசத்தையுடைய அந்தக்கரணத்துடன் கூடின இச்சரீரத்தை ஹோமத்திரவியமாக சமர்ப்பிப்போமாக. ஓ சர்வரக்ஷகரே! எவன் மேற்சொன்னவிதமான சமர்ப்பணையினால் உமக்குப்பணிவிடை செய்வனோ, அவன் தத்பலனான ஸாயுஜ்ஜியத்தை யடைவானாக. உம்மால்சம்ரக்ஷிக்கப்பட்டவன் ஜனன மரணாதி துக்கங்களை யடையான். அவித்தியாதிகளினால் ஜயிக்கப்படவுமாட்டான். அப்படிப்பட்டவனை இந்த ஜன்மத்தில்செய்த பாபமாவது,பூர்வ ஜன்மத்திற்செய்த பாபமாவது அணுகா.

உஉ.

மத்தியான சூர்யோபஸ்தான மந்திரம்.

ஆஸத்யேந ரஜஸா வர்தமாநோ
நிவேசயன்னம்ருதம் மர்த்யஞ்ச।
ஹிரண்யேந ஸவிதாரதே

நா தேவோயாதி புவநா விபச்யன்।
உத்வயம் தமஸஸ்பரி
பச்யன்தோ ஜ்யோதிருத்தமம்।
தேவம் தேவத்ரா ஸூர்ய மகன்ம
ஜ்யோதி ருத்தமம்।
உதுத்யம் ஜாதவேதஸம்
தேவம்வஹந்தி கேதவ:।
திசே விச்வாய ஸூர்யம்।
சித்ரம் தேவநாமுத காதநீகம்
சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்நே:।
ஆப்ருத்யா வாப்ருதிவீ
அன்தரிக்ஷக்ம் ஸூர்ய ஆத்மா
ஜகதஸ்தஸ்து ஷஸ்ச।
தச்சக்ஷுர் தேவஹிதம்
புரஸ்தாச்சுக்ர முச்சரத்।
பச்யேம சரத: சதம் ஜீவேம சரத: சதம்
நந்தாம சரத: சதம்
மோதாம சரத: சதம்
பவாம சரத: சதம்
ச்ருணுவாம சரத: சதம்
ப்ரப்ரவாம சரத: சதம்

அஜீதாஸ்யாம சரதஃ சதம்
ஜ்யோக்ச ஸூர்யம் த்ருசே।
யஉதகான் மஹதோர்ணவாத் விப்ராஜமா
ஸரிரஸ்ய மத்யாத் [ணஃ
ஸமவ்ருஷபோ லோஹிதாக்ஷஃ
ஸூர்யோ விபஸ்சின் மனஸா புனது॥

தா - ம்.—சத்தியசொரூபமான சுயம்பிரகாசத்துடனிருக்கிற கடவுள் அவனவனுடைய கர்மாநுசாரமாய் மோக்ஷத்தை அல்லது மறுபடியும் ஜன்மத்தைக்கொடுக்கிறுர். ஞானத்தையடையச் சாதனமான இச்சரீரமென்கிற ரதத்துடன் பிரகாசிக்கிறவனுய் லோகங்களைப்பார்த்துக் கொண்டுவருகிறுர். மாயா அவித்தைகளினுல் மூடப்படாத சிரேஷ்டமான சுயம்பிரகாசனும், தேவதைகளுக்குத் தேவனும், ஜீவர்களை அவரவர்களுடைய கர்ம்மங்களில் பிரேரணைசெய்கிறவனுயு மிருக்கிற கடவுளை சுவாநுபவத்தினுல் பார்க்கிறவர்களான நாங்கள் தப்பாமலடைவோம், சுவாநுபவத்தினு லுண்டான எங்களுடைய பிரகாசங்கள் அந்தப்பிரசித்தமான சர்வஜ்ஞுன பரமாத்மாவை சமஸ்தமானவைகளும் பரமாத்மதரிசனம்செய்து கிருதார்த்தர்களாக வேண்டி நிச்சயமாய் அடையட்டும். அந்த பரமாத்மாவே சமஸ்தமான தேவதாசொரூபமாயும், ஆச்சரியகரமானதாயுமுள்ள ஒரு தேஜோபுஞ்சமாய் உத்பவித்தார். சகலசே

தனர்களுக்கும் ஞானநேத்திரமாயுள்ள அந்தபரமாத்மா தேவதா உலகங்களையும் பூலோகங்களையும் ஆகாசத்தை யும் நிறைந்தார். ஸ்தாவர ஜங்கமங்க ளிரண்டிற்கும் அந்தப்பரமாத்மாவே பிரேரகனுயிருக்கிருர். சத்குனோ த்தமர்களுக்கு மேன்மையை யுண்டாக்குகிறவராயும், ஞானதிருஷ்டியைக் கொடுக்கிறவராயும், பரிசுத்தமுள் ளவராயும், நாசமற்றவராயும், அநாதியாயு மிருக்கிற அந் தப்பரமாத்மாவாகிய கடவுளை அனேககாலம் சுவாநுப விப்போமாக. அப்படிப்பட்ட சுவாநு பவத்திற்காக அனேககாலம் ஆரோக்கியமா யிருப்போமாக. அந்தச் சுவாநுபவத்திலேயே அனேககாலம் ஆனந்திப்போமாக அவ்வானந்தத்தினுல் அனேககாலம் நிரங்குச திருப்தி யையடைவோமாக. அதிலேயே அனேககாலம் ஆத்மா நுபவப் பிராப்தியுண்டாகி யிருப்போமாக. இஃதுண்டா வதற்காக அனேக கால்ம் குருகுல வாசத்தினுல் தத்து வச்சிரவணஞ் செய்வோமாக. அதன்மூலமாய் நிரங்குச திருப்தியை யடைந்தபிறகு அனேககாலம் எல்லோருக் கும் தத்துவோபதேசம் செய்வோமாக. இப்படிப்பிர வர்த்தித்த போதிலும் அனேககாலம் காமக்குரோதாதி துற்குணங்களினுல் ஜயிக்கமுடியாம லிருப்போமாக. பின்னும் அனேககாலம் பரமாத்மாவை சுவாநுபவத்தினு லடைவோமாக. எந்தப்பரமாத்மா ஆனந்த சமுத்திரத் தில் முழுகியிருக்கையில் சுவாநுபவமாவாரோ, மனதி னுள் சாக்ஷிபூதராய் பிரகாசிக்கிருரோ, தர்ம்ம பிரகாசக

ராகவும், புண்டரீகாக்ஷராகவும், சர்வஜ்ஞராகவு மிருக்கிறரோ அந்த பரமாத்மா, தன்னுடைய கருணைகடாக்ஷத்தினால் என்னைப்பவித்திரனாகச் செய்வாராக.

உரு.

சாயங்கால சூர்யோபஸ்தான மந்திரம்.

இமம்மே வருணச்ருதீஹவ
மத்யாசம்ருடய த்வாமவஸ் யுரசகே।
தத்வாயாமி, ப்ரஹ்மணா வந்தமாந
ஸ்ததாஶாஸ்தே யஜமானோ ஹவிர்பிஃ।
அஹேடமானோ வருணேஹபோத்யுரசக்ம்
ஸமாந ஆயுஃ ப்ரமோஷீ।
யச்சித்திதே விசோயதா
ப்ரதேவ வருண வ்ருதம்।
மினீமஸி த்யவி த்யவி।
யத்கிம் சேதம் வருணதைவ்யே ஜநே
அபித்ரோஹம் மநுஷ்யா ஶ்சராமஸி।
அசித்தீயத்தவதர்மா யுயோபிம
மாநஸ்தஸ்மா தேவஸோதேவரீரிஷஃ।
கிதவாஸோ யத்ரி ரிபுர்நதி வியத்வாகா
ஸத்ய முதயந்நவித்ம।
ஸர்வாதாவிஷ்ய சிதிரேவதேவா
தாதேஸ்யாம வருணப்ரியாஸஃ॥

தா - ம்.—ஒசாக்ஷீசைதன்னிய சொருபரான பரமாத்மாவே! என்னுடைய இந்தப்பிரார்த்தனு ரூபமாயுள்ளமுறையிடுதலுக்குச் செவிகொடுத்து உடனேசுகியாகச்செய்யும். உம்முடைய சம்ரக்ஷணையைக் கோரினவனுய் உம்மைப்பிரார்த்திக்கிறேன். அந்த ரக்ஷணைக்காக வேதத்தினுல் சொல்லப்பட்ட பிரார்த்தனையோடே நமஸ்கரித்து உம்மைசரண மடைகிறேன். ஜீவனுனவன் சரீராதிகளை உமக்குச் சமர்ப்பிப்பதினுல் உம்முடைய சம்ரக்ஷணைக்காகப் பிரார்த்திக்கிருன். ஓ கடவுளே! அநுதரணைசெய்யாமல் இந்தச் சென்மத்திலேயே என்னுடைய பிரார்த்தனைகளைக்கேட்டு அநுக்கிரகஞ் செய்வீராக. மஹான்களாலே மிகவும் கீர்த்தியையடைந்த கடவுளே! எங்களுடைய பிரார்த்தனைகளைக்கேட்டும் அநுக்கிரகஞ்செய்ய காலதாமதஞ்செய்யவேண்டாம். ஓ சுயம்பிரகாசரே! ஓ பரமாத்மாவே! சிறுவர்கள் செய்தபிழைகளை பெரியோர்கள்மன்னிக்கிறுப்போல, பிரதிதினமும் நாங்கள்செய்யும் அபராதங்களை க்ஷமிக்கக் கோருகிறோம், ஓபரமாத்மா! தெய்வபக்தியையுடைய மஹாநுபாவர்களைக்குறித்து ஞானஹீனர்களான நாங்கள் மிதமாயாகிலும் அமிதமாயாகிலும் அபகாரஞ்செய்திருந்த போதிலும், அவிவேகத்தினுல் உம்முடைய சம்பந்தமான சிரவண மனன நிதித்தியாஸனம் முதலான செய்யவேண்டிய சத்கர்மங்களை தானுஞ்செய்யாமல் பிறர்களையும் செய்யவொட்டாமல் கெடுத்திருந்தபோதிலும் ஓ சுயம்பிரகாசரே! அந்தப்பா

பங்களுக்காக எங்களைக் கெடுத்துவிடாமல் அந்தப்பாபங்களை பரிகாரஞ்செய்து ரக்ஷிப்பாயாக. வஞ்சிக்கிறவர்களைப்போலவும் சத்துருக்களைப்போலவும் செய்யக்கூடாதகாரியங்களைச் செய்திருந்தபோதிலும், எந்தப்பாபத்தைத்தெரிந்து செய்திருந்தாலும் தெரியாமற்செய்திருந்தாலும் அவைகளெல்லாவற்றையும் பொடிப்பொடியாகும்படி செய்து நன்றாய் நசிக்கச்செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன், ஓ சுயம்பிரகாசக்கடவுளே! மேற்சொன்னவிதமாய் தெரிந்துந் தெரியாமற்செய்த சகல பாபங்களையும் என்னுடைய பிரார்த்தனையையு மங்கீகரித்துநீங்கள் நசிக்கச்செய்தால் உமக்குப் பிரியனாவேன், இல்லாவிடில் இல்லை யென்பது நிச்சயம். ஆகையால் கிருபைசெய்தருளும்.

உச.

திக்தேவதாதி நமஸ்கார மந்திரம்.

ஓம் நமஃ ப்ருச்யைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்
ப்ரதிவஸன்த்யே தாப்யஸ்ச
நமோ நமோ, தக்ஷிணாயைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்
ப்ரதிவஸன்த்யேதா ப்யஸ்ச
நமோநமஃ, ப்ரதீச்யைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்

ப்ரதிவஸன்த் யேதாப்யஸ்ச
நமோ நம:, உதீச்யைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்
ப்ரதிவஸன்த் யேதாப்யஸ்ச
நமோ நம:, ஊர்த்வாயைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்
ப்ரதிவஸன்த் யேதாப்யஸ்ச
நமோ நமோ, அதருயைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்
ப்ரதிவஸன்த் யேதாப்யஸ்ச
நமோ நமோ, அவான்தருயைதிசே
யாஸ்சதேவதா ஏதஸ்யாம்
ப்ரதிவஸன்த் யேதாப்யஸ்ச
நமோ நம:, கங்கா யமுநயோர்மத்யே
யேவஸன்தி தேமே ப்ரஸந்நாத்மா
நஸ்சிரம் ஜீவிதம் வர்தயன்தி,
நமோ கங்கா யமுநயோர்
முநிப்யஸ்ச நமோ நம:,
ஸந்த்யாயை நம:,
ஸாவித்ரியை நம:,
காயத்ரியை நம:,

ஸரஸ்வத்யை நமஃ
ஸர்வாப்யோ தேவதாப்யோ நமோ நமஃ
தேவேப்யோ நமஃ
ருஷிப்யோ நமஃ
முநிப்யோ நமஃ
குருப்யோ நமஃ
பித்ருப்யோ நமஃ
காமோகார்ஷீன் மந்யுரகார்ஷீன் நமோ நமஃ
ப்ரதிவ்யப்தேஜோ வாயுராகாசாத்
ஓம் நமோ பகவதே வாஸுதேவாய
யாக்ம்ஸதா ஸர்வபூதாநி
சராணி ஸ்தாவராணிச।
ஸாயம் ப்ராதர் நமஸ்யந்தி
ஸாமா ஸந்த்யாபிரக்ஷது॥

தா-ம்.—கிழக்கு திசைக்கு நமஸ்காரம், இந்ததிசையிலெந்த தேவதைக ளிருக்கிறார்களோ அவர்களுக்கு நமஸ்காரம். அப்படியே தெற்கு மேற்கு வடக்கு மேல் கீழ் அவாந்தரதிசைகளுக்கும் அங்குள்ள தேவதைகளுக்கும் நமஸ்காரம். கங்கை யமுனை இவைகளுக்கு மத்தியிலிருக்கிற சுத்தாந்தக்கரணங்களையுடைய மஹாத்மாக்கள் எனக்குச் சிரஞ்சீவிபட்டத்தை ஆசீர்வதிப்பார்களாக. அப்படிப்பட்ட மஹாதீர்த்தங்களாகிற கங்கை.

யமுனைக்கு நமஸ்காரம், முனிகளுக்கு நமஸ்காரம். நன்ருய்த் தியானம் செய்கிரவர்களுக்குப் பரமபுருஷார்த்த சாதனமான ப்ரஹ்ம ஜ்ஞானச்சொருப சக்திகளுக்கு நமஸ்காரம். சமஸ்த தேவதைகளுக்கும், ருஷிகளுக்கும், முனிவர்களுக்கும், குருக்களுக்கும், பிதுருதேவதைகளுக்கும் நமஸ்காரம். காமக்குரோதாதி துற்குணங்கள் என்னைவருத்தாமலிருக்கும்படி அவைகளுக்கு நமஸ்காரம். எல்லாவற்றிற்கும் காரணமான பஞ்சபூதங்களுக்கும் நமஸ்காரம். ப்ரணவ சொருபனுன கடவுளுக்கு நமஸ்காரம். சமஸ்த ஸ்தாவர ஜங்கமங்கள் அல்லும்பகலும் எந்த தெய்வத்தை நமஸ்கரிக்கின்றனவோ அந்தத்தெய்வம் என்னையும் ரக்ஷிக்கட்டும்.

உரு.

சிவாய விஷ்ணு ரூபாய
சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ச ஹ்ருதயம் விஷ்ணுஃ
விஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவஃ
யதா சிவமயோ விஷ்ணு
ரேவம் விஷ்ணுமயஸ் ஶிவஃ।
யதாந்தரம் நபஸ்யாமி
ததாமே ஸ்வஸ்தி ராயுஷி।
நமோ ப்ரஹ்மண்ய தேவாய

கோப்ராஹ்மண ஹிதாயச।
ஜகத்திதாய க்ருஷ்ணாய
கோவிந்தாய நமோ நமஃ।
ஆகாசாத் பதிதம் தோயம்
யதா கச்சதி ஸாகரம்।
ஸர்வதேவ நமஸ்காரஃ
கேசவம் ப்ரதி கச்சதி।
ஸ்ரீ கேசவம் ப்ரதிகச்சத்யோம்நம இதி ॥

தா - ய்.—விஷ்ணுரூபனான சிவனுக்கும், சிவ ரூபனான விஷ்ணுவுக்கும் நமஸ்காரம். சிவனுடைய இருதயமே விஷ்ணுவெனப்படும்; விஷ்ணுவினுடைய இருதயமேசிவனெனப்படும். எப்படி விஷ்ணு சிவசொரூபரோ, அப்படியேசிவனும் விஷ்ணு சொரூபன். இவ்விருவர்களுக்கும் பேதமில்லை யெனத்தெரிந்தவன் எல்லா நன்மைகளையுமடைகிறான். அவிவேகிகளுக்கும் விவேகிகளுக்கும் ஹிதமானவனும், நிஜபக்தர்களுடையபாபாதிதோஷங்களைப் போக்கடிக்கிற சகலலோகஹிதனான பரபிரஹ்ம சொரூபமாயுள்ள பகவானுக்கு நமஸ்காரம். ஆகாயத்திலிருந்து மழைரூபமாய்ப் பொழியப்படுகிற ஜலமானது எப்படி அனேக நதிகளாகி ஒரேசமுத்திரத்தைச் சேருகின்றனவோ அவ்விதமாகவே அனேக தேவர்களுக்குச் செய்யும் நமஸ்காரமானது அந்த ஒரே கடவுளைச்சேருகிற தென்பது நிச்சயம், நிச்சயம், நிச்சயம்.

உகூ.

காயத்திரி பிரஸ்தான மந்திரம்.

உத்தமே சிகரே ஜாதே
பூம்யாம் பர்வத மூர்தநி।
ப்ராஹ்மணேப்யோப்யநுஜ்ஞாதா
கச்சதேவி யதாசுகம்॥
ஸ்துதோமயா வரதா வேதமாதா
ப்ரசோதயந்தி பவனேத்வி ஜாதா
ஆயுஃப்ருதிவ்யாம் த்ரவிணம் ப்ரம்ம வர்சஸம்
மஹ்யம்தத்வா ப்ரயாரும் ப்ரஹ்ம லோகம்.

தா - ம்.—சரீரத்தின் உன்னத ஸ்தானத்திலிருக்கிறவளும், சிரேஷ்டமான பிரஹ்மரந்திர ஸ்தானமாகிறவீட்டையடைய பகவது பாஸகர்களால் செய்யப்படுகிறபிரு ர்த்தனைகளை யங்கீகரித்து நிறைவேற்றினவளாயு மிருக்கிற ஓ ப்ரஹ்ம ஜ்ஞானச்சொரூபிணீ! சுகமாய் திரும்பிப்போவாயாக. கோரின கோரிக்கைகளைக் கொடுக்கிறவளும், வேதங்களுக்குத் தாயாகவும், விவேக அவிவேகப் பிறப்புகளை யுடையவளும், சிரத்தாபக்தி யுடையோர்களை நல்லவழியில் பிரவேசிக்கச்செய்கிறவளுமான நீ, என்னால் ஸ்தோத்திரஞ்செய்யப்பட்டாய்; ஆகையா லிச்சரீரத்தினால் சத்கர்ம்மங்களை யநுஷ்டிக்கச் சகாயமாயுள்ள பூர்ணாயுளையும், தனத்தையும், ப்ரஹ்மவர்ச்சஸ்ஸையுமெ

வக்குத்தந்தருளி உன்னுடைய ஸ்தானமான ப்ரஹ்மரந்திரத்திற்குச் செல்வாயாக, என்றுபிரார்த்தித்துக்கொள்ளவும்.

உஎ.

பகவானுடைய நமஸ்காரம்.

நமோ ஸ்த்வநந்தாய ஸஹஸ்ர மூர்தயே
ஸஹஸ்ர பாதாக்ஷி சிரோரு பாஹவே
ஸஹஸ்ர நாம்நே புருஷாய சாஸ்வதே
ஸஹஸ்ரகோடி யுகதாரிணே நம:||

தா - ம்.—காணப்படுகிற காணப்படாத எல்லாச்சொரூபமாயும், அனேக பாதங்கள் கண்கள் தலைகள் தொடைகள் கைகள் முதலானவைகளை யுடைய, விராட்சொருபனுமான பகவானாகிய ஒரேகடவுளுக்கு நமஸ்காரம், அனேக நாமரூபங்களையுடைய அனேக கோடியுகங்களைத்தரித்து, எல்லாம் நசித்தபோதிலும் தான் நசிக்கமால் சாசுவதமான வஸ்துவாகிற ஒப்பற்றகடவுளுக்கு நமஸ்காரம்.

உஅ.

ஸர்வவேதேஷு யத்புண்யம்
ஸர்வதீர்தேஷு யத்பலம்தத்பலம்
புருஷமாப்நோதி ஸ்துத்வாதேவம்ஜநார்தநம்
ஸ்ரீஸ்துத்வாதேவம் ஜநார்தநமோன்னம இதி||

வாஸநாத் வாஸுதேவஸ்ய
வாஸிதந்தே ஜகத்ரயம்
ஸர்வபூத நிவாஸோஸி
வாஸுதேவ நமோஸ்துதே||

தா - ம்.—எல்லா வேதாத்தியயனத்தினு லுண்டாகும் புண்ணியமும், சகலதீர்த்த ஸ்நானத்தினுலுண்டாகும் பலனும், பகவத்தியானத்தை யுடையவனுக்குண்டாகின்றன. வாஸுதேவனுன நீர் இருக்கிறபடியால் சகலலோகங்களு மிருக்கின்றன. சர்வாந்தரியாமியான ஓகடவுளே! சகல சராசரப்பிரபஞ்சங்களுக்கும் வீடாகவிருக்கிறய். அப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம்.

உகூ.

ப்ரவரம்.

சதுஸ்ஸாகர பர்யன்தம் கோப்ராஹ்
மணேப்யஃ சுபம்பவது|
ஶர்மாஹம்
வர்மாஹம், குப்தோஹம்,
தாஸோஹம் அஹம்போ அபிவாதயே||

தா - ம்.—நான்கு சமுத்திரங்களினுடைய எல்லைக்குட்பட்டிருக்கிற இடங்களில் வசிக்கும் அவிவேகிகளுக்கும் விவேகிகளுக்கும் சகலநன்மைகளு முண்டாவதாக, என்று கடவுளைப்பிரார்த்தித்துக் கொண்டபிறகு,

பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களாகிய நால்வகை வர்ணங்களிலுமுள்ள ஸ்திரீ புருஷர்களெல்லோரும் அவரவர்களுடைய ருஷி கோத்திரம்-வேதசாகை இவைகளைச்சொல்லிக் கடவுளை நமஸ்கரிக்கவேண்டும்.

(இதனால் சகலமானபேர்களும் தெரிந்துகொள்ளவேண்டியதென்னவெனில் :—கடவுளினுடைய பிரார்த்தனை எல்லோருக்கும் பொதுவாகையால் பூர்வத்தில் எல்லா ஜாதிகளிலுமுள்ள ஸ்திரீ புருஷர்களுக்கும் இச்தச் சந்தியாவந்தனமாகிய ஒரேகடவுளின் பிரார்த்தனையானது பொதுவானதாயும் எல்லோரும் அநுஷ்டிக்கவேண்டியதாயுமிருந்ததாகக் காணப்படுகிறது. வர வர ஸ்வகாரியப் புலிகளாகிற குருக்களும் மடாதிபதிகளுமுண்டாகி ஸ்திரீகளையும் பிற்பாடு சூத்திரர்களையும் அதன்பிறகு வைசியர்களையும் அதன்பிறகு க்ஷத்திரியர்களையும் அருகர்களல்லவென்று விலக்கி வேறு வழிகளைக்கற்பித்து பிராம்மணர்களாகிய தாங்களே அருகர்களென்று தற்புகழாகிற (Selfishness) கெட்ட எண்ணத்தினாலதை நிலைநிறுத்தி, அனேக ஜாதிகளையும் ஜாதி வித்தியாசங்களையு முண்டு பண்ணி இந்த ஆரிய மஹாதேசத்தை இப்பொழுதிருக்கிற ஹீனஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்டு, தானுங் கெட்டு இதரர்களையுங்கெடுத்து தேசத்தையும் பாழ்பண்ணிக்குட்டிச்சுவராக்கி விட்டார்க ளென்பது எல்லோருக்கும் அனுபவசித்தமான விஷயம். ஆகையால் ஓ ஆரியசகோதர சகோதரிகளே! இப்பொழுதாவது விழித்துக்

கொண்டு நாமெல்லோரும் ஒரேகடவுளாகிய ஒரேதகப்பனுடைய குழந்தைகளென்கிற நம்முடைய பூர்வஸ்திதியை மறுபடியும் பெற்று நாமும் மற்றவர்களும் நம்முடைய தேசமும் நன்மையை யடையவேண்டி முதலில் நம்முடைய பெண்மணிகளுக்குக் கல்விப்பயிற்சி யுண்டுபண்ணி முன்போல அவர்களை சீதை - மைத்திரேயி, கார்த்தியாயணி - சாவித்திரி முதலானவர்களுக் கொப்பான ஸ்திதியடையச்செய்வதும்பள்ளிக்கூடங்களில் நம்முடைய வாலிபர்களுக்கு பூர்வ சமபுத்தியை யுண்டுபண்ணக்கூடிய பாடங்களை யேற்படுத்தி நாமெல்லோரும் ஒரே கடவுளுடைய குழந்தைகளென்கிற எண்ணத்தை யுண்டுபண்ணி,உங்களால்கற்பிக்கப்பட்டு இழிகுலத்தோர்களென்று விலக்கிவைத்திருக்கிற ஒரேகடவுளினுடைய குழந்தைகளும் நம்முடைய சகோதரர்களுமாகிய அவர்களைச் சமமாகக்கொண்டுவரக்கூடிய பிரயத்தனங்களைச் செய்தும், நம்முடைய தற்புகழால் (Selfishness) நம்மிலிருந்து விலக்கினதால் இழந்துவிட்ட நம்முடையசகோதரர்களான கிறிஸ்தவர்களையும் துருஷ்கர்களையும் மறுபடியும் ஹிந்துவாக வரக்கூடிய வெண்ணமிருந்தால் வேண்டிய வேற்பாடுசெய்து சேர்த்துக்கொள்ளுவதுமான அவசியமாயுள்ள அனேக ஏற்பாடுகளைச் செய்து முன்போல நாமெல்லோரும் சகோதர வெண்ணத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தாலொழிய நம்முடையதேசமும் நாமும் க்ஷேமத்தையடைய முடியாதெ

ன்பது நிச்சயமாகையால், அத்தன்மையையடைய முத
ற்படியாக இந்தச்சந்தியா வந்தனமாகிய எல்லோருக்
கும் பொதுவாயுள்ள கடவுளுடைய பிரார்த்தனையை
நீங்களும் உங்களுடைய குழந்தைகளும் தவறாமல் அநு
ஷ்டித்து சமபுத்தியுடையவர்களாகி தேசநன்மை பிரஜா
நன்மை ராஜ்ஜிய நன்மைகளையடைய இதுதான் சாதன
மென்பதைத்தெரிந்துகொள்ளவும். நம்மிலுங்கூட அனே
கம்பேர்கள் காஸ்மோபாலிடன் கிளப் (Cosmopolitan
club) முதலான சபைகளில் சேர்ந்தும், ரிப்ரெஷ்மெண்
டூருமிலும் (Refreshment Room) இங்கிலீஷ் ஹோட்
டல்களிலும் தமிழ் ஹோட்டல்களிலும் சம்பந்தியாய்ச்
சாப்பிட்டுக்கொண்டு வருகிறபடியால் அனேகர்களுக்கு
இவ்வித சமபுத்தி இஷ்டமாகவே இருக்கிறது. இவைக
ளெல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அப்படியி
ருந்தும் (பப்ளிக்காக) வெட்டவெளியாய் ஆதிகாலத்தை
ப்போல் சகோதரபாவனையாகவும் சாஸ்திரபாவனையா
கவுமில்லாமல் (Semi-public ஆகயிருக்கிறது.) ஒருவ
ரும்துணியாமலும் (Who is to bell the cat) என்றாற்
போல நமக்கென்ன வென்றிருக்கிறதும் சரியல்ல, இப்
பேர்க்கொத்தது அசாஸ்திரீயமுமல்ல. ஆகையால் ஆரிய
சகோதரர்களே! நம்முடைய பூர்வாசாரமாகிய சர்வ
சமத்துவ சகோதர பாவனையை யநுஷ்டானத்திற்குக்
கொண்டுவர இதுவேநல்லசமயமும், கடவுளுடைய இஷ்
டமுமா யிருக்கிறது. ஏனெனில், இப்பேர்க்கொத்த சுவ

தந்திரமான அநுஷ்டானத்தைப் பயமின்றி கைக்கொள்வதற்காகவே கடவுள் நமக்கு லிபெரல் கெவர்ன்மெண்டாகிய (British Liberal Government) பிரிடிஷ் கவர்ன்மெண்டைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் உடனே விழித்துக்கொள்ளுங்கள் ; உடனே எழுந்திருங்கள்; உடனே அநுஷ்டியுங்கள்.)

௩௦.

காயேந வாசா மநஸேந்திரியைர்வா
புத்யாத்மநாவா ப்ரக்ருதே ஸ்வபாவாத்।
கரோமியத்யத் ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்பயாமி।
ஸ்ரீமந்நாராயணாயேதி ஸமர்பயாமி॥

தா - ம்.—மனோவாக்குகாயங்களினாலும், இந்திரியங்களினாலும், புத்தியினாலும், ஜீவசுபாவத்தினாலும், மாயையினாலும் எந்தெந்தக் காரியங்களைச்செய்தாலும் செய்திருந்தாலும், அவைகளெல்லாவற்றையும் ஒரே கடவுளான ஸ்ரீமந்நாராயணனுக்கே சமர்ப்பணைசெய்கிறேன். ஆகையால் ஸ்ரீ மந்நாராயணனுக்கே சமர்ப்பணையாகட்டும்.

சந்தியாவந்தன மந்திரார்த்தபோதினி சமாப்தம்.

ஓம், தத், ஸத்.

The following books edited

BY

Srimath Paramahamsa Bala soobrahmania Brahama sawmy.

புருஷசூக்த ரகஸ்யார்த்த தர்ப்பணம் (தமிழ்)	0	2	0
,, (தெலுங்கு)	0	2	0
பகவத்கீதை கூடார்த்ததீபிகை காலிகோ கட்டடம் தெலுங்கு	4	0	0
,, பைண்டில்லாமல்	3	0	0
பகவத்கீதை ரகஸ்யார்த்தபோதினி தெலுங்கு	1	0	0
,, தமிழ் (In Print)	1	0	0
ஷை தாத்பர்யதீபிகை இதில் கீதை, மகாத்மியம், கீதார்த்தசங்கிரகம், அஷ்டாதசஸ்லோகீ கீதை, சப்தஸ்லோகீகீதை கரஹ்ருதயாதிந்யாசங்கள், த்யானசுலோகங்கள், ஸ்ரீபகவத்கீதைக்கு விரிவான தாற்பரியமுடைய காலிகோ பைண்டு புத்தகம் தெலுங்கு	0	6	0
,, ,, ராபர்	0	4	0
,, ,, தமிழ் காலிகோ	0	6	0
,, ,, ராபர்	0	4	0
கேநோபநிஷத்தீபிகா தெலுங்கு	0	12	0
,, தமிழ்	0	12	0

ஈசாவாஸ்யோபநிஷத் டீகா தெலுங்கு	0	8	0
,, ,, தமிழ்	0	8	0
அம்ருத பிந்தூபநிஷத் டீகா தெலுங்கு	0	1	0
,, ,, தமிழ்	0	1	0
நானார், English "Who am I"	0	0	6
,, தெலுங்கு	0	0	6
சகுணத்தியானம் மனதிற்கு அவஸ்யமா அல்லவா (English)	0	2	0
எஞ்ஞோபவீதம் மும்மதத்தரும் தரித்துக்கொள்ளும் அடையாளம் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி இவைகளைக் குறித்த விவரங்கள் (English)	0	2	0
சந்தியாமந்திரார்த்தபோதினி தமிழ்	0	4	0
,, ,, தெலுங்கு	0	4	0

Can be had from the Sawmy's address at Guntur; from Chilakala Rajagopal Gupta Garu, Diamond Merchant, Madras ; and from the proprietor, K. R. Press, 289 Thumbu Chetty Street, Madras.

SANDHYA MANTHRARTHA BODHINI

EDITED BY

PARAMAHAMSA
BALA SUBRAHMANIA BRAHMA SWAMY.
OF
MADURA.